# நல்லைக்குமரன் மலர்




## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற
## சைவசமய விவகாரக்குழு

இதழ் 19

உ
சிவமயம்

து. சோமசுந்தரம்,
பொருளாளர்
சைவசமய விவகாரக் குழு
யாழ். மாநகராட்சி மன்றம்,



# நல்லைக்குமரன் மலர் - 19

## 2011

பதிப்பாசிரியர் :
**நல்லையா விஜயசுந்தரம்**

**சைவசமய விவகாரக் குழு**
**யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்**

# யாழ்ப்பாணத்து ஆலயங்கள் ஆற்றக்கூடிய பணிகள்

## சோழர்கால ஆலயங்களை அடிப்படையாகக் கொண்ட பார்வை

**சாந்தினி அருளானந்தம்**
யாழ். பல்கலைக்கழகம்

கடவுள் நம்பிக்கை மனித வரலாற்றுடனும், வாழ்வுடனும் இரண்டறக் கலந்த ஒன்று. அவற்றை வெளிப்படுத்தும் ஆலயங்கள் பல்வேறு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டாலும் அதன் குறிக்கோள் ஆன்ம ஈடேற்றமாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மனிதர்களிடையே கடவுள் நம்பிக்கை காணப்பட்டாலும் வரலாற்றுக் காலத்திலேயே தெய்வங்களுக்கு ஆலயங்கள் அமைத்து வழிபடும் முறை தோன்றியதாகக் கூறப்படுகின்றது. சங்ககாலத் தமிழகத்தில் கோயில்கள் இருந்ததாகக் கருதப்பட்டாலும் பல்லவர் காலத்திலேயே அழியாத பொருட்களினால் கோயில் கட்டும் மரபு ஆரம்பித்து வைக்கப்பட்டதைச் சான்றுகள் தெரியப்படுத்துகின்றன. அத்துடன் பல்லவர்கால பக்தி இயக்கமே ஆகம மரபில் கோயில்கள் அமைக்கும் மரபைத் தோற்றுவித்தது. இக்காலத்திலிருந்து கோயில்கள் மக்கள் வாழ்வியலில் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டன. தமிழகத்திற்கும் இலங்கைக்கும் அதிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திற்கும் இருந்த தொடர்புகளின் விளைவாக காலத்திற்குக் காலம் யாழ்ப்பாணத்தின் கோயில்களின் தோற்றம், வளர்ச்சி, எழுச்சி என்பனவற்றில் தமிழகம் பிரதான பங்கு வகித்தமை குறிப்பிடத்தக்கது.

**யாழ்ப்பாணத்துக் கோயில்களின் நிலை**

இன்று யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே கோயில்கள் கட்டுவதும், கட்டடக்கலை ரீதியாகப் புனரமைப்பதும் நடைபெற்று வருகின்றன. சிறப்பாக பரந்த நிலப்பரப்பையும் நான்கு திசை வாயிற் கோபுரங்களையும் கொண்ட தென்னிந்தியக் கோயில்களுக்கு நிகராக யாழ்ப்பாணத்துக் கோயில்கள் இல்லாவிட்டாலும் அமைப்பியல் ரீதியாக அவற்றின் செல்வாக்கினைப் பெருமளவிற்கு நடைமுறைப்படுத்த முற்படுவதனைக் காணலாம். இன்றும் தென்னிந்தியக் கோயிற் கட்டடக் கலைஞர்களை அழைப்பித்து, யாழ்ப்பாணத்துக் கோயில்களைக் கட்டுவதும், புனரமைப்பதும் சாதாரண நிகழ்வாகக் காணப்படுகின்றது. மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோயிலில் ஏறக்குறைய நான்கு வருடங்களாகப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றமை சுட்டிக் காட்டத்தக்கதாகும். யாழ்ப்பாணத்தின் பல கோயில்கள் வருடாந்த திருவிழாக்களையும், நாளாந்தப் பூசைகளையும் நடத்துவதோடு தங்கள் பணிகளை நிறைவு செய்து கொள்கின்றன. சில கோயில்கள் பல ஆண்டுகளாக நீதிமன்றத்தில் வழக்குகளைப் பதிந்து அலைந்து கொண்டிருக்கின்றன. அமைப்பியல் ரீதியில் வளர்ச்சியை எட்ட முனைகின்ற கோயில்கள் நடைமுறையில் எத்தனையோ

பணிகளை முன்னெடுக்க வாய்ப்புக்களைக் கொண்டிருந்த போதும் அவற்றைத் தவிர்த்து வருகின்றன. இதனால் பல கோயில்கள் நிறுவப்பட்டதன் இலக்கை அடைய முடியாதிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் சில கோயில்கள் ஆற்றும் பணிகள் மகத்தானவை. அன்னதானம், ஆதரவற்றோரைப் பேணுதல், தேவாரப் பாடல் போட்டிகளை நடத்துதல், மடங்கள் வாயிலாகப் பல்வேறு பணிகளை மேற்கொள்ளுதல், ஆதரவற்றோரைப் பராமரித்தல், மருத்துவ சேவைகளை மேற்கொள்ளுதல், சமய ரீதியிலான போட்டிகளை நடத்துதல், இசையரங்குகளை நடத்துதல், குறிப்பிட்ட காலங்களில் பிரசங்கங்களை நடத்துதல், நூல்கள், சஞ்சிகைகள் வெளியிடுதல், கட்டிடக் கலை சார்ந்த புதிய அம்சங்களை அறிமுகம் செய்தல் எனப் பல்வேறு நிலைகளில் பங்காற்றி வருவது குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாணத்தில் ஊர்கள் தோறும் பல கோயில்கள் உள்ளன. ஒவ்வொரு ஊரிலும் காணப்படும் ஒரு கோயிலாவது தன் வருவாயை உகந்த வழிகளில் பெருக்கிக் கொண்டு சமய, சமூக, கலைப் பணிகளை முன்னெடுக்கின்ற போது அவ்வூரும், அவ்வாறான ஊர்களினால் இந்து சமுதாயமும் மேன்மையடையும். இதனால் யாழ்ப்பாணத்துக் கோயில்கள் சமுதாயத்தின் பிரதான மையங்களாக மாற்றம் பெறும். சோழர்காலக் கோயில்களின் பணிகளை அவதானிப்பதன் வாயிலாக கோயில்களைத் தளமாகக் கொண்டு காலத்திற்கும், சூழ்நிலைக்கும் பொருத்தமான பணிகளை முன்னெடுத்து, யாழ்ப்பாணத்தின் இந்து சமயப் பண்பாட்டினை மேன்மைப்படுத்தி, நிலைபெறச் செய்ய முற்படுவது அவசியமாகும்.

சோழர்காலத்தில் கோயில்கள் அமைப்பியல் ரீதியாக வளர்ச்சியடைந்த பொழுது அதன் பணிகள் பன்முகப்பட்டனவாக இருந்தன. ஏறக்குறைய ஒரு அரசியல் நிறுவனமாகத் தொழிற்பட்டுப் பன்முகப் பணிகளை மேற்கொண்டன. சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்து அரசியல் வரை கோயில்களின் பணிகளும் பங்களிப்பும் வியக்கத்தக்க வகையில் அமைந்திருந்தமையைச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. அவை செம்மையான அரசியல் அடிப்படையிலேயே தனித்துவமான பணிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் அமையப் பெறாவிடினும் கோயில் நிர்வாகத்தினர் தம் மாலியன்ற சில பணிகளையாவது மேற்கொள்வதன் வாயிலாக அக்கோயில் சார்ந்த சமூகத்தையும் அதன் பண்பாட்டையும் பாதுகாத்துக் கொள்வதோடு சமூகத்தின் பெறுமதிமிக்க விழுமியங்களையும் நிலை நிறுத்துவதில் தமது பங்களிப்பினை வழங்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

### ஆறுமுக நாவலர் காலத்தில் கோயில்கள்

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டு, அதன் பலமான அரவணைப்பின் பின்னணியில் ஆங்கிலக் கல்வியையும், அதனூடாக மேலைத்தேய நவீன கருத்துக்களையும் கிறிஸ்தவத்தினூடாக வழங்கி, சுதேச மக்களின் பண்பாட்டு வாழ்க்கையைத் திசை திருப்ப முற்பட்ட போது ஆறுமுகநாவலர் கோயில்களைச் சீர்திருத்தக் களங்களாக்கினார். வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலைத் தளமாகக் கொண்டு தனது மறுமலர்ச்சி நடவடிக்கைகளை ஆரம்பித்தார். கோயில்களில் புராணபடனம் எழுச்சியடைந்தது.

வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலையும், நல்லூர் கந்தசாமி கோயிலையும் முன் உதாரணப்படுத்துவதன் பின்னணியில் யாழ்ப்பாணத்துக் கோயில்களைச் செம்மைப்படுத்த முயன்றார். யாழ்ப்பாணத்தின் பெரிய கோயிலாகக் கருதப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் நன்முறையில் இயங்கவேண்டியதன் பின்னணியை நாவலர் நன்குணர்ந்திருந்தார் எனக் கருத முடிகின்றது. நல்லூர் ஆலய முன்மாதிரியை இன்றும் குறிப்பாக அதன் அமைப்பியல் சார்ந்த புதிய அம்சங்களைப் பின்பற்றும் கோயில்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் நல்லூர்க் கோயிலுக்குத் தனித்துவமான சிறப்புண்டு. அதாவது யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான மக்களை ஆன்மீக ரீதியாக இணைக்கின்ற சிறப்புடையதாகும். யாழ்ப்பாணத்திற்கு வெளியேயுள்ள பிரதேசங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் வந்து செல்கின்ற ஒரு கோயிலாக விளங்குகின்றது. இதற்குப் பிரதான காரணம் அது யாழ்ப்பாணத்து வரலாற்றோடு இணைந்திருப்பதேயாகும்.

ஆறுமுகநாவலர் சைவப் பிரசாரத்தை முழுவேகத்துடன் கோயிலில் தொடங்கி, பாடசாலைகளுக்கும் விஸ்தரித்தது மட்டுமன்றித் தாய்நாடான தமிழகத்திலும் தொடர்ந்தார். நூற்றுக்கணக்கான அறிஞர்கள் நாவலரைப் பின்பற்றித் தம் வாழ்வைத் தமிழுக்கும் சைவத்திற்கும் அர்ப்பணித்தனர். கி.பி. 1879இல் நாவலர் மறைந்த போது ஆலமரத்தின் விழுதுகளாகப் பல அறிஞர்கள் தோன்றி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைப் பாதுகாத்தமைக்கு நாவலரின் வீறுகொண்ட செயல்களே காரணம். அவரை தேசியவாதியாகவும் பல அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்.

இவ்வாறான பண்பாட்டு மறுமலர்ச்சி இயக்கம் மீண்டும் கோயில்களை மையமாகக் கொண்டு எழவேண்டும். தன்னைச் சூழவுள்ள மக்களைப் பண்பாட்டின் வழி செம்மைப்படுத்த முற்பட வேண்டும். சோழர் காலக் கோயில்களின் பன்முகப்பட்ட பணிகளில் பொருத்தமான சிலவற்றை யாவது சமூகத்தோடு தொடர்புபடுத்தி மேற்கொள்வதோடு, நாவலர் கொண்டிருந்த வீறுடன் கோயில் சார்ந்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதன் வாயிலாக இந்து மற்றும் தமிழ்ப் பண்பாட்டினை மேன்மைப்படுத்துவது கோயில்களின் பணியாக்கப்படுதல் வேண்டும்.

**சோழர் காலக் கோயில்களின் பணிகள்**

- **கோயிலும் அரசும்**

சோழர் காலத்தைப் பொறுத்தவரை கோயில், அரசு, மக்கள் மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவகையில் செயற்பட்ட தன்மையை அவதானிக்கலாம். சோழப் பேரரசர்கள் பேரரசு விரிவாக்கக் கொள்கையின் அடிப்படையில் பெருமளவு பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டபோது அங்கிருந்து பெற்ற செல்வங்களைக் கொண்டு வெற்றிப் பெருமிதத்தை நிலைநாட்டும் சின்னங்களாகக் கோயில்களைக் கட்டினார்கள். போர்களில் பெற்ற வெற்றிகளின் பின்னணியில் முதலாம் இராஜராஜன் தஞ்சைப் பெரிய கோயிலையும், அவனது மகனான இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழேச்சுரத்தையும் அமைத்தமை குறிப்பிடத்தக்கது. இக்கோயில்களே சோழமன்னர் சமயத்திற்கு ஆற்றிய பணிகளை இன்றும் எடுத்துக்காட்டும் மையங்களாக உள்ளன. இவை வெறுமனே வெற்றிச் சின்னங்களாக மட்டும் அமையாது சோழ அரசியற் செயற்பாடுகள் நடைபெறும் தளமாகவும்

மன்னன் முதல் சாதாரண மக்கள் வரை அனைவரையும் சமய ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஒன்றிணைக்கும் மைய நிலையங்களாகவும் விளங்கியிருந்தன. அரசியல் கருமங்கள் அனைத்துமே சமயம் சார்ந்து நடைபெற்றதை நாம் அவதானிக்க முடியும். இராஜராஜசோழன் காலத்தில் அரசியலும் சமயமும் பெற்ற முக்கியத்துவத்தை தஞ்சைப் பெருங்கோயிலில் பதியப்பெற்ற கல்வெட்டுகள் உள்ளிட்ட சான்றுகளில் கண்டு கொள்ள முடியும். இக்கோயில்களின் துணைகொண்டு தான் மக்களைச் சோழ அரசு தொடர்பு கொண்டது. மன்னர்க்கும் மக்களுக்கும் இடையே ஒருவகை மன ஈடுபாட்டை இக்கோயில்களின் விழாக்கள் ஏற்படுத்தின. இவ்வேற்பாடு சோழ அரசியலை நன்கு வேர்பிடிக்கச் செய்ய உதவியது. சோழ அரசியல், மக்களுக்கான அளவிலேயே இயங்கியது என்ற பொதுமை உணர்வை இக்கோயில்கள் வளர்த்தன. இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரை பௌத்த சமயத்தோடு, பௌத்த மகாசங்கத்தோடு நெருக்கமான பிணைப்பினைக் கொண்டிருப்பதைப் போல இந்துசமயத்தோடு கொண்டிருக்கவில்லை என்பதை வரலாறு எமக்குணர்த்தும். ஆயினும் சோழர்கால இலங்கையில் இந்துப் பண்பாடு கோயில்களினூடாகவும் மேன்மையுற்றிருந்ததை இங்கு அமைக்கப்பட்ட கோயில்களும், கிடைத்த சோழக் கல்வெட்டுகளும் எடுத்துக் காட்டுகின்றன.

### ♦ கோயிலும் நீதி நிர்வாகமும்

சோழர் காலத் தமிழகத்தில் நீதி நிர்வாகம் தழைக்க இக்கோயில்களே பெரிதும் பயன்பட்டன. உலாச் சென்ற சோழ அரசர்கள் இக்கோயில்களிலும் இவை சார்ந்த மடங்களிலும் தங்கினர். இதன் மூலம் அங்கு வாழ்ந்த மக்களின் குறைகள் மன்னனின் நேரடி விசாரணை மூலம் தீர்க்கப்பட்டு நியாயமும் வழங்கப்பட்டது. மேலும் நீதி விசாரணை நடாத்திய கிராமசபைகள் கோயில்களிற் செயல்பட்டன. கோயில்களை மையமாகக் கொண்டே குற்றஞ் சாட்டப்பட்டோர்கள் தங்களுக்கு உரிய தண்டனையையும் பெற்றனர். குற்றவாளிகள் குற்றத்திற்குத் தண்டனையாக அல்லது பிராயச்சித்தமாக நந்தா விளக்குகளைக் கோயில்களில் எரிக்குமாறு செய்யப்பட்டனர். அக்காலக் கோயில்கள் பெரிய மண்டபங்களைத் தன்னகத்தே கொண்டிருந்தமையாலும் மக்கள் பெருமளவிற் கூடும் மையங்களாக விளங்கியமையாலும் ஊர், சபை போன்றவற்றின் நிர்வாகக் கூட்டங்கள் கோயில்களிலேயே நடைபெற்றன. இவ்வாறு சோழநாட்டின் நீதி நிர்வாகம் கோயில்களை நிலைக்களமாகக் கொண்டு இயங்கியது. சோழர்காலக் கோயில்கள் அரசியலுக்குரிய சாதனங்களாகச் செயற்பட்டது போல அரசியல் இரண்டுபடுகின்ற போது நடுநிலைமை வகித்ததையும் அவதானிக்க முடிகின்றது. அதேவேளை சோழ மன்னர்களின் மனைவிமார், தண்ட நாயகர்கள், பிற அரசர்கள் போன்றோர் அரசியலுக்கு அப்பாற்பட்டு நின்றும் செய்வித்த அறப்பணிகள் ஏராளம்.

சோழ அரசர்கள் கோயில்களுக்கு ஆற்றிய பணிகள் அவர்களைத் தெய்வ நிலைக்கு உயர்த்தியதுமன்றி இக்காலக் கோயில்களில் அரசனுடைய சிலைகளும் வைத்து வணங்கப்பட்டன. சான்றாக இராஜராஜனுடைய சிலையோடு அவனுடைய மனைவியர் படிமங்களும் பெரிய கோயிலில் இடம் பெற்றிருந்தன. அரசர்களே தெய்வ நிலைக்கு உயர்த்

தப்பட்டுக் கோயிலுக்குரியவர்களாக ஆக் கப்பட்டபோது அரச குடும்பத்திற்கும் மக்களுக்கும் ஏற்பட்ட நெருக்கமான மன வுணர்வு அரசியல் பூர்வமான நலத்தின் பின்னணியில் ஏற்பட்டதெனக் கொள்ள வேண்டும். இன்றைய நிலையில் இத்த கைய உறவினைக் கோயிலுக்கும் சமூ கத்திற்கும் இடையில் வளர்க்க வேண்டி யுள்ளது. மேலும் கோயில் சொத்துக்கள், அதன் பணிகள் அதிகரித்தபோது கோயி லில் கோயிலைச் சார்ந்து ஸ்ரீ காரியம், ஸ்தானத்தார், திருவோலைக் காவல், கோயில் நாயகம் போன்ற பல நிர்வாகி கள் நியமிக்கப்பட்டனர்.

♦ **கோயில்களும் பொருளாதாரமும்**

சோழநாட்டின் பொருளாதாரத்தில் கணிசமான அளவில் சோழர்களின் கோயில்கள் பங்கு கொண்டன. நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களையும் பல் வேறு நீர்ப்பாசன வேலைகளையும் கொண்டிருந்த கோயில்கள் உற்பத்தியி லும் உற்பத்திப் பங்கீட்டிலும் தங்கள் பணியைச் செய்திருந்தன. நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்து வருமானத் தைப் பெருக்கின. சிலவேளைகளில் மக் களுக்கு மட்டுமன்றி ஊர், சபை போன்ற வற்றுக்கு வட்டிக்குப் பணம் கொடுத்தல், கடனுதவி போன்றவற்றைச் செய்தன. மேலும் குற்றம் செய்தோர் தண்டனை அனுபவிக்கும் முறையில் அபராதத்தைக் கோயிலுக்குத்தான் செலுத்த வேண்டும். மன்றுபாடு என்ற வருவாய் கோயிலைச் சென்றடைந்தது. கொடை வழங்குவோர் பாத்திரங்களாக, நகைகளாக, நிலங்க ளாக, கால்நடைகளாக, அடிமைகளாக வழங்கியமையால் கோயில்கள் பெரும் கருவூலங்களாக விளங்கின. சோழர் காலத்திய கோயில்கள் நிலமுதலாளி யாகவும், பணவங்கியாகவும், தர்மகர்த்தா வாகவும் செயல்படும்போது, உதவுகின்ற அலுவலர்களுக்கும், ஏனைய அலுவலர் களுக்கும் கோயில்கள் ஊதியமும், ஊதி யத்தைவிட தெய்வப்பணி செய்யும் வாய்ப்பு வாயிலாக ஆன்ம இலாபத்தையும் வழங் கின. பன்முகப்பட்ட பணிகளினால் கோயில் கள் வேலை வழங்கும் நிறுவனங்களா கவும் செயற்பட்டன.

♦ **கோயிலும் சமுதாயமும்**

சோழர் ஆட்சிக்காலத்தில் கோயில்க ளில் சமுதாய உணர்வு ஆக்கங்கொண் டது. சமூகத்தின் எந்த ஒரு நல்ல காரி யமும் கோயில்களின் வழியாகத்தான் சமூக அந்தஸ்தைப் பெறவேண்டும் என்ற நெறி சோழ அரசர்களுக்கு பெரிதும் உதவியாயிருந்தது. சமுதாயத்தைக் கோயிலுடன் இணைப்பதன் மூலம் தமது அரசியலையும் வலுப்படுத்தியமை குறிப் பிடத்தக்கது. இலக்கியமும் சமுதாய வளர்ச்சியின் முக்கிய அம்சம் என்பதால் அவற்றுக்கு கோயில்கள் வழிவகுத்துக் கொடுத்தன. உள்ளத்துக்கு மட்டுமல்லாது உடலுக்கும் நலம் செய்த பெருமை இக் கால கோயில்களுக்கே உண்டு. மருத்து வச்சாலைகள் கோயிலிலே அமையப் பெற்று இருந்தன. உடற்பிணிபோக்க மருத்துவமனையும், பசிப்பிணிபோக்க சத்திரங்கள், அன்னதான மடங்கள், யாத் திரிகர் இல்லங்கள் போன்றனவும் கோயில் களிலேயே அமைக்கப்பட்டிருந்தன.

பக்தர்களைப் பேணவும் சமயப் பணி கள் சிலவற்றை முன்னெடுக்கவும் பெரிய கோயில்களை ஒட்டியும் கோயில்களின் கட்டுப்பாட்டின் கீழும் பல மடங்கள் செயற் பட்டன. கோயில்கள் செய்ய வேண்டிய பணிகள் சிலவற்றை, சிறப்பாக சமூகப்

பணிகளை இவை பொறுப்பெடுத்தன. 2ஆம் இராஜாதிராஜன், 3ஆம் குலோத் துங்கன் போன்ற மன்னர்கள் காலத்தில் மடத்தின் அலுவல்களைக் கவனிக்க "மடாதிபதி" என்ற பெயரில் தலைவ ரொருவர் நியமிக்கப்பட்டதையும் சமய வல்லுனராகிய இவர் கோயில் நிர்வாகத் தில் பங்கு கொண்டிருந்ததையும் கல் வெட்டுகள் எடுத்துக் காட்டுகின்றன. கோயில்களின் பணி விரிவடைந்த போது அதில் நிர்வாகப் பங்கீடு உள்ளார்ந்த வகையில் மேற்கொள்ளப்பட்டதை இங்கு அவதானிக்கலாம்.

♦ **கோயில்களும் கலைகளும்**

இக்காலத்தில் அரசியலுடன் இணைந்த வகையில் கலைகள், இலக்கியம் என்பன வும் வளர்த்தெடுக்கப்பட்டன. சைவர்களின் சைவசித்தாந்த தத்துவநெறி இக்காலத்தி லேயே எழுச்சி பெற்றது. மேலும் சிதம் பரத்திலே கண்டெடுக்கப்பட்ட நாயன்மார் பதிகங்கள் தொகுக்கப்பட்ட நிகழ்வும் குறிப்பிடத்தக்கது. கோயில்களில் நடனக் கலைக்கும், பண் ஓதும் பணிக்கும் ஊக்க மளிக்கப்பட்டு, அவர்களுக்குரிய ஊதியம் கோயில்களால் வழங்கப்பட்டதை தஞ்சைப் பெருங் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஆடல்மகளிர் பரதம் செய்தமைக்குரிய ஊதியத்தையும் கோயில்களே வழங்கின. மேலும் இக் கலைகள் கோயில்களில் இருந்த ஆசிரி யர்களூடாகப் பயிற்றுவிக்கப்பட்டதையும் அறிகின்றோம். நம்பியாண்டார்நம்பி தொகுத்த தேவாரப் பாடல்களுக்கு கோயில்களில் முக்கியத்துவம் அளிக்கப் பட்டது. இங்கே ஓவியங்கள் வரையப் பட்டதுடன் செப்புச் சிலைகளும் வடிவ மைக்கப்பட்டன. கோயில்களில் புராண இதிகாசக் கருத்துக்கள் சிற்பங்களா கவும், ஓவியங்களாகவும் உள்வாங்கப் பட்டன.

கோயிற் கட்டிடக்கலை பொறுத்தும் இக்கால கோயில்கள் முக்கியத்துவம் பெறுவதை தஞ்சைப் பெருங்கோயிலின் அமைப்பிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். தஞ்சைப் பெருங்கோயிலில் நாடகம் நடிக்கப்பட்டமைக்கும் சான்றுண்டு. இராச ராசேஸ்வர நாடகம் நடத்தப்பட்டதை கல் வெட்டிலிருந்து அறியமுடிகின்றது. வாழ்க் கைக்குத் தேவையான கருத்துக்கள் பல வற்றை கோயில்களிலே காணமுடிந்தது. இவற்றின் மூலம் இக் கோயில்களுக்கு வருவோருக்கு பழங்கால வரலாற்றை எடுத்துக்காட்டியதோடு, நிகழ்கால வாழ்வு வளம்பெறவும் வழிகாட்டின. சமுதாய ஒற்றுமையுணர்வு வளர்வதற்கும் நாட்டைப் பற்றிய அறிவு பெறுவதற்கும், கடவுளு ணர்வு, அரச பற்றுதல் என்பவற்றை நிலைப்படுத்துவதற்கும் கோவில்களை மையமாகக் கொண்ட திருவிழாக்கள் உதவின எனலாம். இராஜராஜசோழ மன்னன் தன் பிறந்தநாள் விழாவை சதயத்திருநாள் விழாவாக கோயிலில் கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.

மன்னர்கள் அரசியல், சமூகம், பொரு ளாதாரம் போன்றவற்றில் ஏற்பட்ட சில பிரச்சினைகளின் தீர்வுகளையும் கோயில் களிலேயே கல்லெழுத்துக்களாகப் பதித்து வைத்தனர். சோழர்கால அரச ஆணை கள் ஓலையில் எழுதப்பட்டாலும் கல் வெட்டுகளில் அவை செதுக்கப்பட்ட பின்பு தான் நிரந்தரமுடைய பத்திரங்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றன. திருவாலங் காட்டுச் செப்பேடுகள், அன்பில், ஆனை மங்கலம் செப்பேடுகள் போன்ற செப்புப் பட்டயங்களைத் தவிர்த்து இக்கோயில்

களில் காணப்படுகின்ற கல்வெட்டுக்கள் உறுதியுள்ள வரலாற்றுச் செய்திகளைத் தருகின்ற தடயங்களாக விளங்குகின்றன. இவ்வகையில் கோயில்கள் வரலாற்று ஆதாரங்களைப் பேணி வந்துள்ளதைக் காணலாம். இவற்றின் மூலம் சோழர்கால வரலாற்றைச் சிறப்பாக சோழர் காலக் கோயில்களின் பணிகளை இன்றும் நாம் அறிய முடிகின்றமை சிறப்புக்குரியதாகும்.

**முடிவுரை**

சோழர் காலக் கோயில்களை நோக்கும்போது அக்கால கட்டத்தில் அவை பல்வேறு முனையிலும் பரந்துபட்ட பணிகளை மேற்கொண்டன என்பதைக் கண்டு கொள்ளலாம். ஒரு அரசுக்கு எவ்வாறு துறைகள் அமைந்திருந்தனவோ அதே போல கோயில்களுக்கும் பற்பல துறைகள் காணப்பட்டன. கோயில்கள் சுயேச்சையாக இயங்கக் கூடிய ஆட்சி அதிகாரத்தையும், பொருளாதார பலத்தையும், சமூகத்தில் செல்வாக்கையும், அரசனின் பேராதரவையும் பெற்றிருந்தன. கோயில்கள் ஒவ்வொன்றும் தனித்து இயங்கும் திறமை பெற்றிருந்தன. இக்கோயில்கள் நடுநாயகமாக விளங்கி அரசையும் மக்களையும் இணைக்கும் வகையில் செயற்பட்டன. அதேவேளை பண்பாட்டு மையங்களாகவும் செயலாற்றின. சோழர்களின் பலம் வாய்ந்த அரசியலும், கட்டுக்கோப்பான நிர்வாக முறையும், அரசியலோடு சமயத்தையும் இணைத்துத் தம் பேரரசினை நிறுவியமையும் அக்காலக் கோயில்களின் எழுச்சிக்கும், பல தரப்பட்ட செயற்பாடுகளுக்கும் காரணமாக இருந்தன. ஆனால் யாழ்ப்பாணக் கோயில்கள் இவ்வாறான அடித்தளத்தைக் கொண்டிருக்கவில்லை. சோழர்களால் நிறுவப்பட்ட கோயில்கள் ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அக்காலத்தில் அரச மையங்களாக இருந்த கோயில்கள் கால, மற்றும் அரசியல் மாற்றங்களால் இன்று அத்தகைய சிறப்பினை இழந்தாலும், அவை மேற்கொண்ட பணிகள் பலவற்றை தற்கால தமிழகக் கோயில்கள் மேற்கொண்டு வருகின்றன. அவற்றை ஒத்த வகையில் யாழ்ப்பாணக் கோயில்களும் சமுதாயத்தை மேம்படுத்தவும், இந்துப் பண்பாட்டினை அழியாது பாதுகாக்கவும் முற்படுதல் அவசியமானதாகும். சோழர் கால கோயிற் செயற்பாடுகள் போல முன்னெடுக்க முடியாதெனினும் தற்கால தமிழகக் கோயிற் செயற்பாடுகளை யாவது நாவலர் காலத்து மறுமலர்ச்சிக் கால உத்வேகத்துடன் மேற்கொள்ளுதல் நன்று. முன்னர் குறிப்பிட்டது போல பல பணிகளை முன்னெடுக்கும் சில கோயில்கள் யாழ்ப்பாணத்திற் காணப்படுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. மற்றைய கோயில்களும் அவ்வாறான கோயில்களைப் போல காலத்திற்கு உகந்த பணிகளை ஆற்றினால் யாழ்ப்பாண இந்து சமுதாயம் மேன்மையடையும் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்கமுடியாது.